**முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்**

**O.S.No. 5/2022**

DW1– அய்யம்பெருமாள் நாள்–06 .11.2024

**1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் இராணுவத்தில் வேலை பார்த்தேன். எனக்கு வழக்கு சொத்து விவரங்கள் எனக்கு தெரியும். பிச்சையப்ப உடையாருக்கு அழகம்மாள், பச்சையம்மாள், முத்துசாமி, அய்யம்பெருமாள் , ஆறுமுகம் ஆகியோர் பிள்ளைகள். வாதிகள் ஆறுமுகத்தின் வாரிசுகள். அழகம்மாள் இறந்துவிட்டார். பச்சையம்மாள், ஆறுமுகம், முத்துசாமி ஆகியோர் இறந்துவிட்டார்கள். முத்துசாமியின் மகன் தான் 2ம் பிரதிவாதி பரமசிவம். பொது குடும்ப சொத்துகள் எல்லாம் 1964ல் பாகம் பிரித்துக் கொண்டோம். ஊர் பெரியவர்களை வைத்து பாகம் பிரித்துக்கொண்டதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. வெள்ளாறு வடக்கே என் அண்ணன் முத்துசாமிக்கும், தம்பி ஆறுமுகத்திற்கும் பாகம் கொடுக்கப்பட்டது. பாகம் பிரித்துக்கொண்டதற்கு வாய்மொழி பாகத்தை தவிர ஆவணங்கள் எதுவும் இல்லை. சர்வே எண்.98/9, மற்றும் 98/84 ஆகியவை ஆறுமுகத்திற்கு ஒதுக்கப்பட்டதாக சொல்லியுள்ளேன். சர்வே எண்.98/1, 98/2, 98/5சி, 98/8பி ஆகியவை முத்துசாமிக்கு ஒதுக்கியதாக சொல்லியுள்ளேன். எனக்கு 5 ஏக்கர் பாகம் பிரிந்தது. சர்வே எண் ஞாபகம் இல்லை. என் சகோதரர்களுக்கு ஆளுக்கு 3 1/2 ஏக்கர் ஒதுக்கப்பட்டது. எனது அண்ணன் முத்துசாமி மூத்தவர் என்பதால் அவர் தான் நிர்வாகம் செய்து கொண்டிருந்தார் என்றால் சரிதான். முத்துசாமி சொத்துக்களை நிர்வாகம் செய்தபோது நான் இராணுவத்தில் வேலை பார்த்தேன். திருமணம் ஆகும் வரை எல்லோரும் ஒன்றாக இருந்தோம். அதன்பிறகு பிரிந்துவிட்டோம். நாங்கள் சகோதரர்கள் அனைவரும் அவரவர் குடும்பத்தார்கள் ஒன்றாக இருந்தோம் என்றால் சரியல்ல. 1 முதல் 8 வரையிலான சொத்துக்கள்

அனைத்தும் பூர்வீக சொத்துக்கள் இல்லை என் அப்பா அம்மா சம்பாதித்ததும், நான் சம்பாதித்ததும் தாவா சொத்தில் உள்ளது. நான் எந்தெந்த சொத்தை வாங்கினேன் என்பதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் பரமசிவத்திடம் ஆவணங்களை எடுத்துக்கொண்டு போய் வழக்கறிஞரிடம் கொடுக்க சொன்னேன். பாகப்பிரிவினை பிரச்சனை வந்து வழக்கு போட்டபோது தான் சொன்னேன். பாகப்பிரிவினை குறித்து ஆறுமுகம் பிள்ளைகளும், பரமசிவம் பிள்ளைகளும் அடித்தடி நடந்தது என்றால் சரியல்ல. போலீஸ் கேஸ் ஆனதா என்றால் எனக்கு தெரியாது. போலீசார் இருதரப்பினரையும்அழைத்து சிவில் வழக்கு என்பதால் நீதிமன்றத்தில் பார்த்துக்கொள்ள சொல்லி அறிவுரை சொன்னார்கள் என்றால்அது பற்றி எனக்கு தெரியாது. ஆறுமுகம் என் பெயரில் ஆர்டிஓ போட்டு பாகம் கேட்டு வழக்கு போட்டார் என்றும் அது நிலுவையில் உள்ளபோது இறந்துவிட்டார் என்றும் சொன்னால் தெரியாது. 2021-ல் ஆறுமுகம் இறந்துவிட்டார். எனது அண்ணன் முத்துசாமி இறந்து 40 ஆண்டுகள் இருக்கும். நானும் பரமசிவமும் சேர்ந்து கொண்டு தாவா சொத்துக்களில் பாகம் இல்லை என்று சொல்லி ஆறுமுகத்தின் குடும்பத்தினரை விரட்டினோம் அதனால் பிரச்சனை ஆனது என்று சொன்னால் சரியல்ல. எந்தெந்த சர்வே எண்ணில் உள்ள சொத்துக்களை யார்யார் அனுபவித்து வருகிறார்கள் என்பது பற்றி நான் வழக்கறிஞரிடம் சொல்லி அவர் எழுதினார். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக பிராதை படித்துக்காட்டிதான் கையெழுத்து வாங்கினார்கள். ஆறுமுகம் உயிரோடு இருந்தபோதே வி.களத்தூருக்கு அதர்நத்தம் என்ற கிராமத்தில் இருந்து வந்து பாகம் கேட்டார்கள் என்று நாங்கள் பாகம் இல்லை என்று சொல்லி விரட்டிவிட்டோம் என்றால்

சரியல்ல. பொதுக்குடும்ப சொத்தை எனது மகன் பெயரில் பாகம் சேர்த்துவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. எனது பேரன் சேரன்பாண்டியனுக்கு சொத்தை எழுதிக்கொடுத்தேன். பரமசிவமும் அவரது மனைவி பெயருக்கு பொதுக்குடும்ப சொத்தை எழுதிவைத்தார் என்றால் சரியல்ல. அவர் சம்பாதித்த சொத்தை தான் எழுதி வைத்தார். சொத்தை வில்லங்கம் செய்வதற்காக வங்கியில் அடமானம் வைத்து கடன் வாங்கினார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பொதுக்குடும்ப சொத்துக்களை 3 பாகமாக பிரித்து 1 பாகத்தை வாதிகளுக்கு கொடுக்க சொல்லிதான் வழக்கு போட்டுள்ளார்கள் என்றால் ஏற்கனவே சரியாக பிரித்துக்கொடுத்துவிட்டோம்.

**மறுவிசாரணை**

இல்லை

Sd/-A. Balkis, B.L.,
Principal District Judge
Perambalur.